# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.3

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.நாட தன்னாசி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 21st day of February, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது கொத்தனேரி கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் மனைவி முருகேஷ்வரி. என் மனைவியுடன் பிறந்தவர்கள் 3 தம்பிகள், அவர்கள் பெயர்கள் செல்வகணேஷ், நாகராஜ், வீரகணேஷ். வழக்கில் இறந்துபோனவர் என் மூத்த மைத்துனர் செல்வகணேஷ். ஆஜர் எதிரியை தெரியும். செல்வகணேசுக்கும், டபிள்யூ புதுபட்டியை சேர்ந்த பாண்டீஸ்வரிக்கும் திருமணம் நிச்சயம் செய்தோம். கடந்த 03.11.2021ம் தேதி என் மூத்த மைத்துனர் செல்வகணேஷ் அவருக்கு நிச்சயம் செய்த பாண்டீஸ்வரியை பார்க்க சென்றார். அதன்பின் 6ம் தேதி வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டார். அன்று பாண்டீஸ்வரியின் குடும்பத்தினர் வீட்டிற்கு வந்தனர், திருமணம் சம்மந்தமாக பேசிவிட்டு சென்றனர். அவர்கள் கிளம்பும் போது செல்வகணேசும் அவர்களுடன் சென்றுவிட்டார். கடந்த 07.11.2021ம் தேதி காலை 07.00 மணியளவில் என் அத்தை கற்பகவள்ளிக்கு மாலை வருவதாக செல்வகணேஷ் சொன்னான். மாலை 05.50 மணியளவில் நான்

வீட்டிலிருந்து எங்கள் ஊர் கொத்தனேரிக்கு கிளம்பினேன். அப்போது 06.15 மணியளவில் என் மைத்துனர் செல்வகணேஷ் இருசக்கர வாகனத்தில் வந்தார், பின்னால் ஆஜர் எதிரி உட்கார்ந்திருந்தார். குமுளங்குளம் விலக்கில் வைத்து பார்த்தேன். வண்டியை நிறுத்தி என்னிடம் பேசிவிட்டு சென்றனர். ஆஜர் எதிரி யார் என்று கேட்டேன், அதற்கு செல்வகணேஷ், பாண்டீஸ்வரியின் மாமா என்று சொன்னான். அவர்கள் இருவரும் செங்குன்றாபுரம் பக்கம் சென்றார்கள். நான் எங்கள் ஊருக்கு சென்றேன். 08.11.2021 ம் தேதி காலை 08.00 மணியளவில் எனது மைத்துனர் நாகராஜ் எனக்கு போன் செய்து தனது அண்ணனை யாரோ அடித்து கோட்டையம்மன் கோவில் அருகே உள்ள ஊரணியில் அரையும் குறையுமாக எரித்து போட்டிருப்பதாகவும், அதனால் கேஸ் கொடுக்க போவதாகவும் சொன்னார். நான் 08.10 முதல் 08.15 க்குள் கோட்டையம்மன் கோவிலுக்கு சென்று பார்த்தேன். முகம் சரியாக தெரியவில்லை. இடுப்பிற்கு கீழ் பெரும்பாலும் எரிந்திருந்தது. பைக்கும் எரிந்த நிலையில் இருந்தது. போலீஸார் வந்துவிட்டார்கள், விசாரித்தார்கள். நான் போலீஸாரிடம் என் மைத்துனருக்கு உள்ளூரில் எந்த எதிரிகளும் இல்லை என்றும், அவருக்கு திருமணம் நிச்சயித்த வழியில் ஏதேனும் பிரச்சினை உள்ளதா என்று விசாரிக்குமாறு கேட்டுக்கொண்டேன். போலீஸார் யார் மீதும் சந்தேகம் உண்டா என்று கேட்டார்கள், அந்த நேரத்தில் பதட்டத்தில் போலீஸாரிடம் சொல்லவில்லை. பின்னர் போலீஸாரிடம் கடைசியாக ஆஜர் எதிரியையும் எனது மைத்துனரையும் பார்த்த விவரத்தை சொன்னேன். பின்னர் ஆஜர் எதிரி எனது மைத்துனருக்கு நிச்சியம் செய்த பாண்டீஸ்வரியை ஒருதலையாக காதலித்து, பாண்டீஸ்வரியை யாரும் திருமணம் முடிக்ககூடாது என்ற காரணத்திற்காக எனது மைத்துனரை எரித்து கொலை செய்தததாக போலீஸார் சொல்லி தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நடந்த சம்பவம் குறித்து போலீஸார் சொல்லி தான் தெரியும். நான் சம்பவ

இடத்திற்கு சென்றபோது அங்கு போலீஸாரும், இறந்தவரின் உறவினர்களும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். போலீஸார் இறந்தவர் யார் என்று அங்கு இருந்தவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் எனது மைத்துனர் நாகராஜ், அவரது அப்பா, அம்மா ஆகியோருடன் காவல்நிலையததிற்கு சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் கலந்து பேசி புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். பிரேத விசாரணையின் போது நான் உடன் இல்லை. போலீஸார் விசாரணையில் நான், இறந்தவரும், ஆஜர் எதிரியும் ஒன்றாக இருசக்கர வாகனத்தில் சென்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு சொல்லாததற்கு காரணம் 07.11.2021 ம்தேதி மாலை இறந்தவரும், ஆஜர் எதிரியும் ஒன்றாக இருசக்கர வாகனத்தில் செல்லவில்லை என்பதால் தான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீஸார் விசாரணையின் போது எதிரியின் பெயர் மற்றும் அங்க அடையாளங்களை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி யார் என்று கேட்டேன், அதற்கு செல்வகணேஷ், பாண்டீஸ்வரியின் மாமா என்று சொன்னதாக நான் முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை நான் போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>